முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1164

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.12.2022, செவ்வாய்கிழமை

1. பிரணவ சக்திமிகு அரங்கா
பிரணவ சித்தியாய் உலகோர்க்கு
சரவணச்சுடரேற்றி அருளுகின்ற
சற்குருவே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 20 ம் நாள் 06.12.2022, செவ்வாய்கிழமை)
வரமென அரங்கன் திருவடி பற்றி
வையகத்தார் ஞானம் பயின்றால்
3. பயின்றுவர அவர்களுக்கெல்லாம் ஞானவான்களாகின்ற
பழுதில்லா வாய்ப்பும் யோகமும் கூடி
கூடியே உலகினில் அரங்கன் தேடுகின்ற
குறையில்லா ஞானிகளாக உலகமக்கள்
4. குவலயத்தில் ஓங்காரக்குடில் நோக்கிவர
இனிமைபட தேறி இனிதே
இந்த உலகில் அற்புதங்கள்
அரங்கன் நிகழ்த்தும் காலம்
5. காலமதில் அனைவருக்கும் பெரும்பேற்றுக்குண்டான
வாய்ப்பு பிசகின்றி கிட்டி இந்த கலியுகத்தில்
தடையற உலக மாற்றமாக
தவசி அரங்கன் வழி அற்புதம் நிகழும்
6. நிகழவே அரங்கனுக்குள் ஆறுமுகன்
நித்தம்நித்தம் அற்புதங்கள் நிகழ்த்தி வர
வரமென அரங்கன் தொடர்பு கூட்டி
வையகத்தார் தொடர்ந்து வந்தால் போதும்
7. போதுமப்பா உலக மாற்றம் சடுதி
புண்ணியத்தால் இனிதே சடுதி கண்டு
ஆதரவாய் உலகோர்கள் பலபேர்கள்
அரங்கனால் ஞானி ஆகி பெரும்பேரு காண நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–